விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 296 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (11.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## நெருக்கடி நிலை உச்சம்!

# பல புதிய வரிகளுக்கு அமைச்சரவை அனுமதி



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து பல வரிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் புதிய வரிகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வரிகள் குறித்து வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சினால் வெளியிடப்படவுள்ளது. (05ஆம் பக்கம் பார்க்க)

## அடக்குமுறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### சட்டத்தரணிகளால் முன்னெடுப்பு



(கொழும்பு)

"மக்களின் சுதந்திர உரிமைகள் மீது கைவைக்காதே" என்ற தொனிப்பொருளில் கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சட்டத்தரணிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று ▶11

## மகிந்தவை இன்னும் மக்கள் நேசிக்கின்றனர்

### ரோகித அபேகுணவர்த்தன

(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் மகிந்த ராஜபக்ஷவை நேசிக்கிறார்கள் என்பதை களுத்துறை நிரூபித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை உடைக்க முடியாது எனவும் அவர் நேற்று இடம் ▶11

## வவுனியாவில் கடும் மழை

### இயல்பு வாழ்வு பாதிப்பு

(வவுனியா)

வவுனியாவில் நேற்றைய தினம் பெய்த கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மாலை வேளையில் ▶11

## முதல் பெண் போராளி மாலதியின் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த முதல் பெண் போராளி 2ஆம் லெப்டினன்ட் மாலதி (பேதுருப்பிள்ளை சகாயசீலி)யின் நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி கோப்பாய் கிறேசர் வீதியில் இந்திய இராணு ▶11

## முல்லையில் மனித எச்சங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஆனந்தபுரம் கிருஷ்ணன் கோயிலுக்கு பின்புறமாக உள்ள காணி ஒன்றிலிருந்து மனித எச்சங்கள் நேற்று ▶11

## அந்நிய செலாவணி பற்றாக்குறை தொடர்ந்து கடன் வாங்க வேண்டிய நிலை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப நிரந்தரமான தேசியக் கொள்கை ஒன்றே அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதற்காக கட்சி பேதமின்றி ஒரே தேசிய கொள்கையின் ஊடாக செயற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கிருமித் ▶11



## ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக இளங்கோவன் நியமனம்?

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேலதிக செயலாளராக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் நியமிக்கப் ▶11

## போதைப்பொருட்களுடன் இருவர் யாழில் கைது

(கொழும்பு)

ஹெரோயின், ஐஸ் போதைப் பொருள் மற்றும் போதை ஏற்றுவதற்குரிய பொருட்களுடன் இருவர் யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பகுதியில் வைத்து இருவரும் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடமிருந்து 2 ▶11

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

### மருதங்கேணியில் சம்பவம்

(கரணவாய்)

தவறான முடிவெடுத்ததில் இளைஞன் ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளான்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த ▶11



## வடக்கை முன்னேற்ற பங்களிப்பு வழங்குங்கள்

### வட மாகாண பிரதம செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தினை முன்னேற்றுவதற்கு பங்களிப்பினை வழங்குங்கள்! என வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

அண்மையில் வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற யாழ் வலயத்திற்குட்பட்ட பாட ▶11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்




08.10.2022 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் **வணிகமாணி** (B.Com) பட்டம் பெற்ற சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த

## செல்வன். கந்தசாமி முரளிதரன்

அவர்களை மென்மேலும் பல பட்டங்களைப் பெற்றுயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(13069)

-வாழ்த்துவோர்கள்-

**என்றும் உமது அன்புக்கினிய அனைத்து உறவுகளும்**

# மரண அறிவித்தல்



பிறப்பு 28 – 04 – 1949

இறப்பு 10 – 10 – 2022

## கந்தையா சின்னத்துரை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை அவர்கள் நேற்று (10.10.2022) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற கதிரவேலு, காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற இராசையா மற்றும் பொன்னுத்துரை, கருணாகரன், செல்லம்மா, இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுதாமதி, தயாமதி, சுதாகர், சுகிர்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதீசன், சபாநாதன், ஜெயப்பிரியா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டியோனியஸ், டிஷாவின், ஹர்ணிகா, ரஷ்மிகா, ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.10.2022) புதன்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5071)

தகவல் :-
சுதாகர் (மகன் ) 077 394 6490 குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சக ஆசிரியர்
திரு: **ரங்கநாதன்** அவர்களின் பாசமிகு தந்தை
அமரர்

## தாமு வீரசிங்கம்

( ஓய்வுபெற்ற அதிபர் )

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-5072)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா / செங்குந்த இந்துக் கல்லூரி**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 10 . 1930



உதிர்வு 26 . 09 . 2018

## அமரர் இராசம்மா சேனாதிராசா

திதி 10.10.2022

நீங்கள் தந்த நீங்கா நினைவுகளை
எம் இறுதி மூச்சு வரை சுமந்து
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5068)

"சாய் இல்லம்"
கரவெட்டி மத்தி, கரவெட்டி. குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தல்லவி

அமரர்

## ஆனந்தசிவம் இராஜேஸ்வரி

(13026)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (09.10.2022) ஞாயிறுக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.10.2022) செவ்வாய்க் கிழமை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பளை, வீமன்காமம், தெல்லிப்பளை.
077 967 0424
077 214 1984
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் போதைவஸ்தை முற்றாக ஒழிப்பது அரசின் பொறுப்பு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பாதுகாப்புத் துறையினராலும் பொலிஸாரினாலும் அவர்களது புலனாய்வுப் பிரிவினராலும் தீவிரமாகக் கண்காணிக்கப்படும் நிலையில் போதைப் பொருள் கடத்தல் தடையின்றி இடம்பெறுவது பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றன என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இத்தகையோரின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். போதைவஸ்துக் கடத்தலைக் கண்டித்து ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஒரு பக்கத்தில் நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியில் இருக்கின்ற அதே சமயம், போதைவஸ்தின் பாவனை என்பது நாட்டிற்குள் மிக அதிகளவில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் இளைஞர்களும் யுவதிகளும் போதைவஸ்துக்கு அடிமையாவதாக மருத்துவர்களாலும் சமூகநலன் விரும்பிகளாலும் இன்னும் பலதரப்புகளாலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உலகநாடுகளில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட விதமான போதைவஸ்துகளின் விற்பனை நிலையமாகவும் விநியோக மையமாகவும் இலங்கை மாறி வருகின்றது. கஞ்சா, ஹெரோயின், ஐஸ் போன்ற பல்வேறு வகையான போதைப் பொருட்கள் இலங்கையில் பாவனையில் இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் மிக அதிகளவிலான போதைப் பொருட்களைஉட்கொள்வதன் காரணமாக பல இளைஞர்கள் அண்மைக்காலத்தில் மரணத்தைத் தழுவியுள்ளனர்.

அத்தோடு, போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் பல்லாயிரக்கணக்கான ரூபாவைக் கொடுத்து அவற்றை வாங்க வேண்டியிருப்பதன் காரணமாக பல்வேறுபட்ட களவுகள், கொள்ளைகள், வழிப்பறிகள் போன்றவை இடம் பெறுவதுடன் வாள்வெட்டுக் கலாசாரங்களும் இதனால் உருவாகி வருகின்றன.

போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் அவர்களைச் சார்ந்த புலனாய்வுத் துறையினருக்கும் இருக்கின்ற பொழுதும் கூட, இவை முழுமையாக நிறை வேற்றப்படுகின்றதா என்ற ஐயம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

இவ்வாறான ஒரு மோசமான சூழலில் பெற்றோர்கள், சகோதரர்கள் தங்களது குழந்தைகளை ஏனைய சகோதரர்களை தொடர்ச்சியான கண்காணிப்புக்குள் உட்படுத்தி இந்த சமூகத்தில் அவர்களை நற்பிரஜைகளாக கொண்டு வர சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். நாங்கள் சகலரும் ஒன்றிணைந்தாலே இளைஞர்கள், யுவதிகள், மாணவர்களைப் பாதிக்கும் இந்தக் கொடூரமான போதைவஸ்து அரக்கனை சமூகத்திலிருந்து அகற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-6)


# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/ 021 228 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **11.10.2022 ஆம் திகதி முதல் 31.10.2022 ஆம் திகதி** வரை காலை 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வித் தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. **20.10.2022** ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
8. கேள்விகள் யாவும் **31.10.2022** ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியின் நிதிக்கிளையில் காணப்படும் பெறுகைப்பெட்டியினுள் நேரடியாக இரு பிரதிகளில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் **31.10.2022** ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **(Bid Security)** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| CATEGORY 1 | Document Issuing/Purchasing Period | | | | From 11.10.2022 until 31.10.2022 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | at 10.00A.M on 20.10.2022 | | |
| | Closing and Opening of Bids | | | | at 10.30 A.M on 31.10.2022 | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/Chestclinic/2022 | Renovation of Chest Clinic at DGH Kilinochchi | 17.41 | 06 Months | C5 or C6 (Buildings) | 3,000.00 | 175,000.00 | 13.02.2023 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**
**TP- 0212285719, Fax- 0212285931 E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

(c-5069)




யாழ்.வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இவ்வாலயத் தீர்த்தத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.
(படங்கள்: சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

# யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட பிறப்பு பதிவு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் நேற்று பிறப்பு பதிவு செய்யாத பிள்ளைகளிற்கான பிறப்பு பதிவு செய்யும் விசேட நிகழ்வு மாவட்ட செயலக டிநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இதில், பிரதி பதிவாளர் நாயகம் கே.நடராஜா இது வரை பிறப்பு பதிவினை செய்யாத பிள்ளைகளிற்கான பிறப்பு பதிவினை மேற்கொண்டார்.

இவ் விசேட நிகழ்வில் 25 பேரிற்கு பிறப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மேலதிக மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், Oferr ceylon நிறுவன பிரதிநிதிகள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (ரி-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரேயஸ் ஐயர், இஷான்கிஷான் அதிரடி தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா




தென்னாபிரிக்கா அணிக் கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில், இந்திய அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், 1-1 என்ற கண க்கில் சமநிலை பெற்று ள்ளது.

ராஞ்சி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழ ற்சியில் வெற்றிபெற்ற தென்னா பிரிக்கா அணி, முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெ டுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக் கெட்டுகள் இழப்புக்கு 278 ஓட் டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, ஹெய்டன் மார்க்ரம் 79 ஓட்டங்களையும் ரீஸா ஹென்ரிக்ஸ் 74 ஓட்ட ங்களையும் பெற்றுக் கொண் டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணி யின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 3 விக்கெட்டுகளையும் வொஷிங்டன் சுந்தர், ஷ்பாஸ் அஹமட், குல்தீப் யாதவ் மற்றும் சர்துல் தாகூர் ஆகி யோர் தலா 1 விக்கெட்டினை யும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 279 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங் கிய இந்திய அணி, 45.5 ஓவர்கள் நிறைவில் 3 விக் கெ ட்டுகள் இழப்புக்கு வெற்றி இல க்கை கடந்தது. இதனால், இந்தி யக் கிரிக்கெட் அணி 7 விக் கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காது 113 ஓட் டங்களையும் இஷான் கிஷான் 93 ஓட்டங்களையும் பெற் றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாய கனாக 111 பந்துகளில் 15 பவுண் ரிகள் அடங்கலாக ஆட்டமிழ க்காது 113 ஓட்டங்களை பெற் றுக்கொண்ட ஸ்ரேயஸ் ஐயர் தெரிவுசெய்யப்பட்டார். (6)

# இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு புதிய தலைவர்

இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை (பிசிசிஐ) தலைவராக உள்ள சௌரவ் கங்குலி மற்றும் செயலாளராக உள்ள ஜெய் ஷா ஆகியோ ரின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைய உள்ளதால் அந்த பதவிக ளுக்கான தேர்தல் பணி களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தொடங்கி யுள்ளது.

இந்த தேர்தலில் போட்டி யிடுவோர் இன்று மற்றும் நாளை வேட்புமனுக்கள் தாக் கல் செய்யலாம் என்றும் மனு க்கள் மீதான பரிசீலனை நாளை மறுதினம் நடைபெறும் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித் துள்ளது.

வேட்பாளர்கள் தங்களது மனுக்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் திரும்பப் பெறலாம் என்றும் எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்தல் நடை பெறும் என்றும் இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டு சபை தெரி வித்துள்ளது.

இந்த நிலையில் இந்த தேர்தலில் தலைவர் பதவிக்கு இந்த முறை கங்குலி போட்டி யிடவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. (6)




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான 47 ஆவது தேசிய மட்ட தடகள தொடரின் முதல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கம் பஹா மாவட்டத்தில் நடைபெற்ற அரை மரதன் போட்டியில் வடமாகாண முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கீரன் வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார்.

(படம்-கனகராஜா)

# மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 12 . 1937



விண்ணில் 10 . 10 . 2022

திருமதி

## அனந்தலெட்சுமி இரத்தினேஸ்வரன்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடக்கு, யாழ். ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட அனந்தலெட்சுமி இரத்தினேஸ்வரன் அவர்கள் நேற்று திங்கட்கிழமை (10.10.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாரந்தனை வடக்கு நல்லதம்பி - சரஸ்வதியம்மா (கல்வீட்டு ஆச்சி) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - நேசம்மா தம்பதிகளின் அன்பு மருகளும் காலஞ்சென்ற இளையதம்பி இரத்தினேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும் ரமேஷ்(கிராம அலுவலர் - இணுவில்), காலஞ்சென்ற வைத்தியர் சுரேஸ் (அவுஸ்திரேலியா), சுதர்சன் (தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் உதயராணி(ஆசிரியை- சன்மார்க்கம் வித்தியாலயம்), நாளாயினி(முன்னாள் தேசிய சேமிப்பு வங்கி அலுவலர்) (அவுஸ்திரேலியா), வினுஜா (ஆசிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பத்மாவதி, மகாலெட்சுமி(கனடா), நடேசன், தனக்குமார், சுகுமாரன், இராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அருமைத்திருநாயகம், பாலதேவன், இராஜசிங்கம் புவனேஸ்வரன், றோய் செல்லப்பா ஆகியோரின் மைத்துனியும் மங்களேஸ்வரி, சர்வலோஜனி, பத்மலோஜன் ஜெயப்பிரமலோஜன் ஆகியோரின் பாசமிகு அண்ணியும் துசானி, காருணி, நிதுசன், அக்சன்னா, பிரகவி, அதிப்பிரதன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் சிவதர்சனா குமரசிறி, சிவாதரன், தர்ஷிகா ஆகியோரின் பெரியம்மாவும் மதிவதனி, மதிவதனா, அனுசியா ஆகியோரின் சின்னம்மாவும் மார்கோணி மதிவதனன், ஜோன்சன் மணிவண்ணன், றொனால்ட் உதயவண்ணன், றொசானா சுமதி ஆகியோரின் சின்னமாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2022) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரமேஷ் (கிராம அலுவலர்) மகன் - 077 614 5232
மகாலட்சுமி (கனடா) - சகோதரி 0012892403666

தகவல்: குடும்பத்தினர்

(13073)

# பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 3 பேருக்கு பகிர்ந்தளிப்பு



பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு மூன்று பொருளாதார வல்லுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பென் பெர்னாக், டக்லஸ் டைமண்ட், ஃபிலிப் ஹெச் டிப்விக் ஆகிய மூன்று பொருளா தார வல்லுநர்களுக்கு நோபல் பரிசு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் நிதி நெருக்கடிகள் குறித்து ஆய்வுக்காக மூன்று பேருக்கும் நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது. (4)

# அரசாங்க நிலத்தில் பயிர்ச்செய்கை பிரதமர் அதிரடி உத்தரவு

நாட்டிலுள்ள அரசாங்க நிலத்தை விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்குவதில் எந்தவொரு அரசாங்க அதிகாரியும் தலையிட வேண்டாம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரி வித்துள்ளார்.

பல்வேறு சுற்ற றிக்கைகளின்படி அரசாங்க நிலங் களை விவசாயிக ளுக்கு பயிர்ச்செய் கைக்காக வழ ங்க அரசாங்கம் உத்தர விட்டுள்ளதாக பிரத மர் வலியுறுத்தி னார்.

பொருளாதார நெருக்கடியை சமா ளிக்க உணவு உற் பத்தியில் நாடு தன் னிறைவு அடைய வேண்டும் என ஹோமாகம கந் தனவத்தை பிரதே சத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் குறிப்பிட் டார். (4)

## கண்ணீர் அஞ்சலி



யா/சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியை திருமதி உ.ரமேஸ் அவர்களின் அன்பு மாமியார்

அமரர்

### அனந்தலெட்சுமி இரட்ணேஸ்வரன்

அவர்கள் 10.10.2022 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(C-5070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுவோரும் வரி செலுத்த வேண்டும்

## புதிய பல வரிகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து பல வரிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் புதிய வரிகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வரிகள் குறித்து வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சினால் வெளியிடப்பட உள்ளது.

அந்தவகையில், மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேல் வருமானம் பெறுவோர் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் முதல் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் வரை சம்பளம் பெறுவோருக்கு 6 சதவீதத்தினால் வரி விதிக்கப்படவுள்ளதாகவும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகளவு சம்பளம் பெறுவோருக்கு 12 சதவீதம் வரி விதிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னர் மாதாந்தம் 250,000 சம்பளம் பெற்றவர்களிடம் இருந்து இந்த வரி அறவிடப்பட்டது.

தற்போது 14 சதவீத வரி விதிக்கப்படுட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம் மற்றும் ஏற்றுமதி துறைகள் தொடர்பான வணிகங்களுக்கான வருமான வரி 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## தேசியக் கொள்கைக்கு அமைய செயற்பட்டால் நாடு தோல்வியடையாது-ஜனாதிபதி



(கொழும்பு)

அனைவரும் தேசியக் கொள்கைக்கு அமைய செயற்பட்டால் நாடு தோல்வியடையாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க ஏற்றுமதி பதப்படுத்தும் வலயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மருந்து உற்பத்தி தொழிற்சாலையை நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டார். (நி)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் உயர்தர சைவ உணவகத்திற்கான பணியாட்கள் தேவை.

1. சமையற்காரர்
2. சமையல் உதவியாளர்
3. பார்சல் கட்டுபவர்

மேற்படி வேலை தெரிந்தவர்கள் "ஹரிஸ் ரேஸ்ரி" பெற்றோல் செற் லேன், நெல்லியடி கரவெட்டி எனும் வியாபார நிலையத்திற்கு நேரடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

**உரிமையாளர்** (C-5066)

## ஏல விற்பனை

கரவெட்டி மத்தொனியில் இருக்கும் வெல்லன் கொன்ஸ்ரக்ஸன் நிறுவனத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

1. கொங்கிறீட் மிசின் 02
2. யக்முட் 165
3. பலகை
4. முட்டுத்தடி
5. நிலை, கதவு, யன்னல்
6. சுருக்கு கேற்
7. கம்பஸ் மரங்கள்

எல்லா நாளும் பகல் 12 மணியிலிருந்து 5 மணி வரை பார்வையிடலாம்.

**தொடர்புக்கு 077 618 1414 (அயுகரன்)** (C-5065)


# சடுதியாக குறைவடையும் வாகனங்களின் விலை

(கொழும்பு)

சந்தையில் வாகனங்களின் விலை சடுதியாக குறைவடைந்து வருவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விலைகளில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கொவிட் வைரஸ் பரவல் காரணமாக பொருளாதார ரீதியாக இலங்கை கடுமையான பாதிப்புகளை சந்தித்திருந்தது. இந்த நிலையில் பொருளாதார பாதிப்பிலிருந்து மீளும் முகமாக கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி வாகன இறக்குமதிக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இலங்கையில் வாகனங்களின் விலைகள் பல மடங்காக அதிகரித்திருந்தன.

இந்த நிலையிலேயே சந்தையில் தற்போது வாகனங்களின் விலை சடுதியாக குறைவடைந்து வருவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரென்ஜிகே கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அதிகரித்த வட்டி வீதம், எரிபொருள் விலை உயர்வு மற்றும் உதிரிப்பாகங்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாகவே வாகனங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

வாகனங்களின் விலை குறைவடைந்த போதிலும் உதிரிப்பாகங்கள், வாகன திருத்தம் மற்றும் பழுதுபார்த்தல் என்பவற்றுக்கான கட்டணங்கள் சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு சூழலில் வாகனம் கொள்வனவு செய்ய காத்திருப்போருக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில், பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விலைகளும் குறைவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த 2020 ஆம் ஆண்டு வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட பின்னர், வாகனங்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


# இராசிபலன்

**11.10.2022**
**புரட்டாதி 24, செவ்வாய்க்கிழமை**
**துதியை பின்னிரவு 2.38 மணிவரை**


**அச்சுவினி பிற்பகல் 6.09 மணிவரை**
**சுபநேரம் 10.32-12.02 மணிவரை**
**இராகுகாலம் 3.02-4.32 மணிவரை**

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்


**வளவன்**





வீட்டில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கற்பனை மிகுதியான நாள்.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.




வியக்கும் வாழ்வமைய விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நாள், சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





வாகன சுகமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, மறைமுக எதிர்ப்பையும் எளிதில் சமாளித்து விடுவீர்கள், பயணங்கள் கைகூடும்.




சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




சுதந்திரமாகச் செயற்படும் நாள், வியாபார விருத்தியுண்டு, சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பர்.




புதிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.




பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழி பிறக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**உன் பணியைச் செய்ய மட்டும் உன் புலன்களைப் பயன்படுத்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.

மகாகவி பாரதியார்

மூலையிலே சிறு நூலும் புது நூலாயின் முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன்

ஊர்செல்லக் காட்டும் வழிபோல வாழ்வுக்கு நேர் பாதை சொல்வதே நூல்

சாமி சிதம்பரன்

புத்தகங்கள் மனித சமூகத்திற்காகப் பேரறிஞர்கள் விட்டுச் சென்றுள்ள பரம்பரைச் சொத்தாகும்.

அடிஸன்

பிறர் எழுதியுள்ள புத்தகங்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தை செலவிடுங்கள் பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் எளிதில் பெறக் கூடிய பயன் இது

சாக்ரடீஸ்

என் மனதுக்கு உகந்த நூல்களை மட்டும் கொடுத்து என்னை என் வாழ்வு முழுவதும் சிறையிட்டாலும் நான் கஸ்டப்பட மாட்டேன்.

மாஜினி

ஒரு பெரிய நூல் நிலையத்தில் மானிட சமுதாயத்தின் நாட்டுறிப்பேடு அமைந்துள்ளது.

ஜி.டாசன்

நூல் நிலையத்திற்குள் பாம்பை நுழைய விட்டால் கூடப் பரவாயில்லை நமது பண்பாட்டை ஒழுக்கத்தை உணர்வைக் கெடுக்கின்ற நூல்களை நுழைய விடக் கூடாது.

குன்றக்குடி அடிகளார்.

நாடு நலம் பெற வீட்டுக்கொரு நூலகம் வேண்டும்.

அறிஞர் அண்ணா.

## நன்றி கெட்ட மனிதா

சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாத இரண்டு வழிப்போக்கர்கள் ஒரு பெரிய மரத்தின் அடியில் சென்று நிழலில் தங்கினர்.

அவர்களில் ஒருவன் மற்றவனிடம் இந்த மரத்தால் யாருக்கு என்ன பயன்?, இது பழங்கள் தருவதில்லை என்று சொன்னான் உடனே அந்த மரம் அட நன்றி கெட்ட மனிதர்களே நான் கொடுக்கும் நிழலில் தங்கி இருந்து கொண்டே என்னால் ஒரு பயனும் இல்லை என்றும் என்னை வளர்த்ததால் இலாபம் இல்லை என்றும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டது.

## மாணவர்க்கேற்ற மணிமொழிகள்

- உன்னை யாரும் கேட்காது விட்டால் நீ யாருக்கும் ஆலோசனை சொல்லதே.
- கலை கல்வி என்பன மிக நீண்டவை ஆனால் காலம் என்பதே மிக விரைவானது.
- வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு சமன்.
- நம் வாழ்நாள் மிகக் குறுகியது. ஆனால் செய்ய வேண்டியது நமது கடமைகளே மிகவும் அதிகம்.

# சிலப்பதிகாரம்

## கோவலனின் பூர்வஜென்மம்




மதுராபதியால் கண்ணகிக்கு எதிரே நிற்க முடியவில்லை.

அவள் பார்வையில் இருந்த உக்கிரம் எரிந்து கொண்டிருந்த தீப்பிழம்புகளைக் காட்டிலும் உஷ்ணமாக இருந்தது. அதனால் மதுராபதி கண்ணகியின் பின்னால் நின்று பேசியது.

'பெண்ணே உனக்கு வாழ்த்துக்கள். நான் சொல்லப்போவதைக் கேட்பாயா?'

'யார் நீங்கள்? எதற்காக என்பின்னே வருகிறீர்கள்?' எனக்கு ஏற்பட்ட பெரும் துயரம் உங்களுக்குத் தெரியுமா?'

'எனக்குத் தெரியும்' என்றது மதுராபதி.

'உன் கணவன் கொலையுண்டது குறித்து எனக்கும் பெரிய வருத்தம் உண்டு.'

'நீங்கள் யார் என்ற கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே!'

'நான் இந்த மதுரை நகரின் காவல் தெய்வம். என் பெயர் மதுராபதி. உனக்குச்சில உண்மைகளை நான் சொல்ல வேண்டும்.'

'என்னது?'

'பாண்டியன் நெடுஞ்செழியன் இந்தப் பிறப்பில் எந்தக் கெட்டதும் செய்யாதவன்'

'என் கணவரைக் கொன்றது கெட்ட விடயம் இல்லையா?'

'அது உன் கணவனின் முன்வினைப் பயன்'

'அவர் முற்பிறப்பில் என்ன தீங்கு செய்தார்?'

'முற்பிறப்பில் உன் கணவனின் பெயர் பரதன். அடுத்த நாட்டிலிருந்து வந்த ஒரு வணிகன் கொல்லப்பட அவன் காரணமாயிருந்தான்.'

'அது எப்படி?'

கலிங்கத்தில் இருந்த சிங்கபுரத்தையும் கபிலபுரத்தையும் ஆண்ட அரசர்களுக்கு இடையே ஜென்மப் பகை. இரு நாடுகளுக்கும் இடையே இருந்த பகுதியில் எப்போதும் போர் நடந்து கொண்டே இருந்தது.

'இதனால், அந்தப் பகுதிக்கோ அதைக் கடந்து வேற்று நாட்டுக்கோ செல்ல யாருக்கும் தைரியமில்லை.

சங்கமன் என்கிற வணிகன் மட்டும் அதைச் செய்யத் துணிந்தான். காரணம் அவனுக்கு அயல் நாட்டில் வணிகம் செய்து நிறையப் பொருள் ஈட்டும் ஆசை.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 97

ரஷ்ய ஜனாதிபதி புடின், வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோ ஆகியோரின் சொத்துகளை முடக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்திருக்கிறது.

"அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையால், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது" என, ரஷ்யா கூறியுள்ளது

இது குறித்து ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ரோஸ் கோஸ்மோஸ்) இயக்குநர் ஜெனரல் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் 'சர்வதேச விண்வெளி நிலையம் அமெரிக்கா, ஜப்பான், கனடா மற்றும் சில நாடுகளின் கூட்டு முயற்சியால் இயங்கி வருகிறது. அதில் 4 அமெரிக்கர்கள், 2 ரஷ்யர்கள், ஒரு ஜேர்மனியர் என 7 பேர் பணியாற்றி வருகின்றனர். விண்வெளி மையம் ரஷ்ய இன்ஜின்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

எங்களுக்கு நீங்கள் ஒத்துழைப்பு தராவிட்டால் விண்வெளி நிலைய செயற்பாடுகளில் பிரச்சினை ஏற்படும். விண்வெளி நிலையத்தை பாதுகாக்க முடியாமல் போனால் 500 தொன் எடை உடைய விண்வெளி நிலையம் இந்தியா அல்லது சீனாவில் விழும் ஆபத்து உள்ளது. அது, ரஷ்யாவின் மீது பறக்கவில்லை. அதனால் உங்களுக்குதான் அனைத்து பாதிப்பும் ஏற்படும். அதற்கு நீங்கள் தயாரா? ஐரோப்பா, அமெரிக்காவில் விழுந்தால் அதை நீங்கள் தாங்குவீர்களா? என்று எச்சரித்துள்ளார். ரஷ்யாவின் இந்த மறைமுக மிரட்டல் உலக நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

**பெப்ரவரி 27, 2022**

ஐரோப்பிய ஒன்றியத்தின் வான் வெளியில் ரஷ்ய சிவிலியன் விமானங்கள் பறப்பதை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது. ரஷ்ய அரசுக்கு சொந்த மான ஊடகமான ஸ்புட்னிக் மற்றும் ரஷ்யா டுடே (RT), அவற்றின் துணை நிறுவனங்களுடன், EU அலைக் கற்றை மற்றும் இணையத்தில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யத் துருப்புக்கள் உக்ரைனின் தலைநகரான கீவ் , கார்கிவ் மற்றும் கெர்சன் நோக்கிப் படையெடுத்தன.

கார்கிவ் நகருக்கு வெளியே உள்ள ஒரு எரிவாயுக் குழாய் ரஷ்யத் தாக்குதலால் தகர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதே சமயம் வாசில்கிவ் அருகே கிரியாச்சி கிராமத்தில் உள்ள எண்ணெய்க் கிடங்கு ஏவுகணைகளால் தாக்கப்பட்டதால் தீப்பிடித்தது.

நோவா ககோவ்காவின் மேயர் விளாடிமிர் கோவலெங்கோ, ரஷ்ய துருப்புக்களால் நகரம் கைப்பற்றப்பட்டதை உறுதிப்படுத்தினார்.

மேலும் அவர் கோசாட்ஸ்கே மற்றும் வெசெலேவின் குடியிருப்புகளை ரஷ்யத் துருப்புக்கள் அழித்ததாக குற்றம் சாட்டினார்.

ஒரு தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி புடின், நேட்டோ உறுப்பினர்களால் "ஆக்கிரமிப்பு" என்று அழைத்ததற்கு பதிலளிக்கும் விதமாக, "ரஷ்ய இராணுவத்தின் தடுப்புப் படைகளை ஒரு சிறப்புப் போர் சேவையில் வைக்குமாறு" பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொதுப் பணியாளர்களின் தலைவருக்கு உத்தரவிட்டதாகக் கூறப்பட்டது.

உளவுத்துறை ஆய்வாளர் நிறுவனமான ரோச்சன் கன்சல்டிங்கின் கூற்றுப்படி, மரியுபோல் மற்றும் பெர்டியன்ஸ்க்கை முற்றுகையிட்டு ரஷ்ய சார்புப் படைகளால் பிடிக்கப்பட்ட பகுதிகளூடாக கிழக்கு உக்ரைனில் உள்ள பகுதிகளுடன் கிரிமியாவை இணைப்பதில் ரஷ்யா வெற்றி பெற்றுள்ளது.




(தொடரும்)

## கிரிமியா பாலம் மீதான தாக்குதலுக்கு ரஷ்யா பதில் தாக்குதல்

### 17 உக்ரைனியர்கள் உயிரிழப்பு

(கீவ்)

தெற்கு உக்ரைனில் உள்ள ஸபோரிஸியா நகரில் ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் 17 பேர் உயிரிழந்துள்ளதோடு 12 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் நகர மையப் பகுதியில் 7 ஏவுகணைகள் விழுந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களின் போது முக்கிய வீதியில் உள்ள 5 மாடி குடியிருப்பு கட்டடம் தரை மட்டமானது. ஸபோரிஸியா நகரத்தில் நடத்தப்பட்ட பல்வேறு ஏவுகணைத் தாக்குதல்களில் 20 தனி வீடுகள் மற்றும் 50 குடியிருப்புக் கட்டடங்கள் சேதமடைந்தன. பல தளங்களைக் கொண்ட கட்டடம் இடிந்து விழுந்ததால் அப்பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது. தாக்கு தலில் காயமடைந்த சுமார் 40 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே கார்கீவ் பிராந்தியத்தில் ரஷ்யப் படைகள் கைப்பற்றிய குப்யான்ஸ்க் நகரை மீட்டு உக்ரைன் இராணுவம் முன்னேற முயன்ற போது ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைன் இராணுவ வீரர்கள் 220 பேர் உயிரிழந்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு உக்ரைனின் கிரிமியா தீபகற்ப பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டதற்கு பிறகு 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவையும் கிரிமியாவையும் இணைக்க கெர்ச் ஜலசந்தியில் 19 கி.மீ தொலைவுக்கு பாலம் கட்டப்பட்டது. இந்தப் பாலத்தில் வாகனங்கள் செல்ல 4 வழி வீதியும் இரட்டை ரயில் பாதையும் உள்ளன. நடுவில் கப்பல்கள் கடந்து செல்ல தூக்குப் பால வசதியும் உள்ளது.

கடந்த 8 ஆம் திகதி வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட லொறி பாலத்தில் வெடித்துச் சிதறியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது. சரக்கு ரயிலின் 7 எரிபொருள் டேங்கர்கள் எரிந்து நாசமாகின.

சேதமடைந்த பாலத்தில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் மீண்டும் போக்குவரத்து தொடங்கியது. இந்த நிலையில், உக்ரைனுக்கு எதிரான போரை வழிநடத்த ஜெனரல் செர்ஜி சுரோவிகின் என்ற புதிய தளபதி நியமிக்கப்பட்டுள்ள நிலையில் கிரிமியா பாலம் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது. (நி)

## ஈரான் அரச தொலைக்காட்சியை முடக்கிய போராட்டக்காரர்கள்

(டெஹ்ரான்)

ஈரானில் அரசு தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பை போராட்டக்காரர்கள் ஹேக்கிங் செய்தனர்.

ஈரான் நாட்டில் இஸ்லாமிய மத சட்டங்களின்படி ஹிஜாப் அணிவது கட்டாயம் என்ற சூழலில் தெஹ்ரான் நகரில் ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்குச் சென்ற 22 வயதான மாஷா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும் ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட வன்முறையில் இதுவரை 154 பேர் உயிரிழந்து உள்ளனர்.



இந்நிலையில், ஈரானிய இஸ்லாமிய குடியரசின் நியூஸ் நெட்வேர்க் சார்பிலான தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பின்போது உள்ளே புகுந்த போராட்டக்காரர்கள் சில நிமிடங்கள் வரை நிகழ்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

அந்நாட்டு மதத் தலைவரான அயதுல்லா அலி காமினி கலந்து கொண்ட கூட்டம் ஒன்றின் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்பட்டபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்து உள்ளது. அதில் நிகழ்ச்சி சில விநாடிகள் வரை போராட்டக்காரர்களின் செய்கையால் ஹேக்கிங் செய்யப்பட்டு பெரிய மீசை, தாடி மற்றும் புருவங்களுடன் கூடிய கறுப்பு வண்ண முகமூடி அணிந்த கார்ட்டூன் வரைபட தோற்றம் காட்டப்பட்டது.

இந்த ஹேக்கிங்கிற்கு அவர்கள் பொறுப்பு ஏற்று உள்ளனர். அதனைத் தொடர்ந்து காமினியின் படமும் ஈரானில் கடந்த மாதம் உயிரிழந்த இளம்பெண்களான நிகா ஷாகராமி, ஹதீஸ் நஜாபி, மஹ்சா ஆமினி மற்றும் சரீனா இஸ்மாயில்ஜடே ஆகியோரின் புகைப்படங்களும் இடம் பெற்றிருந்தன. இந்த புகைப்படங்கள் சில விநாடிகள் வரை திரையில் காட்டப்பட்டன.

எங்களுடன் இணைந்து போராட வாருங்கள் என்ற செய்தியும் அந்தப் புகைப்படங்களுடன் காட்டப்பட்டன. எங்களுடைய இளைஞர்களின் இரத்தம் உங்கள் பிடியில் இருந்து வழிந்தோடுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. (நி)

## படகு விபத்தில் 76 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் துயரம்

(நைஜர்)

நைஜீரியாவின் தென் கிழக்கு மாநிலமான அனம் ப்ராவில் படகு விபத்தில் 76 பேர் உயிரிழந்துள்ளனர்.

அனம்ப்ரா மாநிலத்தில் உள்ள ஒக்பாரு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்தது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என அதிகாரிகள் தெரிவித்த னர்.

நைஜீரியாவில் படகு விபத்துக்கள் ஒப்பீட்டளவில் பொதுவானவை. இருப்பினும் பெரும்பாலானவை அதிக சுமை அல்லது மோசமான பாதுகாப்பு நடவடிக்கைகளால் நிகழ்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

# அடுத்த 6 மாதங்களுக்கு பலி எண்ணிக்கை அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் குடிமக்கள் பெரும்பாலான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களைப் பெறுவதற்கான அணுகலை இழந்துள்ளனர்.

இதனால் அவர்கள் மனிதாபிமான பேரழிவுக்கான பாதையில் உள்ளனர் என்று இலாப நோக்கற்ற மனிதாபிமான அமைப்பான டிரெக்ட் ரிலீப் எச்சரித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சந்திப்பைத் தொடர்ந்து, கருத்துரைத்த டிரெக்ட் ரிலீப் அமைப்பின் முகாமையாளர் கிறிஸ் அலேவே இலங்கையின் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், "அடுத்த ஆறு மாதங்களுக்கு, பேரழிவு எண்ணிக்கையிலான இறப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கொழும்பில் உள்ள 3,500 படுக்கைகள் கொண்ட இலங்கை தேசிய மருத்துவமனை, வழக்கமாக 1,300 மருந்துகளை கையிருப்பில் கொண்டுள்ளது. இப்போது 60 அத்தியாவசிய மருந்துகளை மட்டுமே அது கையிருப்பில் கொண்டுள்ளது.

நாட்டில் மயக்க மருந்து பற்றாக்குறையாக இருப்பதாகவும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை உட்பட நாட்டில் பெரும்பாலான பொது அறுவை சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

புற்றுநோயாளிகள் கொடிய நோயை எதிர்த்துப் போராடத் தேவையான மருந்துகளை இழந்துள்ளனர்.

நீரிழிவு நோயாளிகள் இரத்த சர்க்கரை பரிசோதனைக்காக' தங்கள் சொந்த குளுக்கோஸ் மீற்றர்களை பாதுகாப்பாக எடுத்து வர வேண்டும் என்ற நிலையில் உள்ளனர். பல மருத்துவமனைகளில் அடிப்படைப் பொருட்கள் இல்லை என்றும் டிரெக்ட் ரிலீப் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (நி)

# பண்டிகைக் காலத்தில் முட்டைக்குத் தட்டுப்பாடு

(கொழும்பு)

சுமார் 50% முட்டை உற்பத்தியாளர்கள் முட்டை உற்பத்தியை கைவிட்டுள்ளதாக அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதித்தமையும் கால்நடைத் தீவன தட்டுப்பாடும் இதற்கு காரணம் என சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகை காலத்தில் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை கோழி இறைச்சியின் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிகாரங்களை மீறும் பொலிஸார்

## சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அதிகாரங்களை மீறும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு - காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தில் கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் வருகை தந்ததை அடுத்து, அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான உத்தரவின் பேரில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்றாவது ஒருநாள் தமது சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பதில் கூற வேண்டி வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு, தங்கள் முதலாளிகளை திருப்திப்படுத்துவதற்காக மக்களின் உரிமைகளை மீறும் பொலிஸ் அதிகாரிகளை தான் பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி)

# தலைமைத்துவத்தை ஏற்க மக்கள் தயாராக வேண்டும்

## பேராயர் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

சுயநலமானதும் பேராசையுடைய கலாசாரமுமே இன்று நாடு பின்னடைவை சந்தித்துள்ளமைக்கான காரணமாகும்.

இதே போன்று தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருந்தால் எதிர்கால சந்ததியினருக்கு எதுவும் மிஞ்சாது.

எனவே அடுத்து தலைமைத்துவத்தை ஏற்பதற்கு பொதுமக்கள் தயாராக வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

பேருவளையில் அமைந்துள்ள தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆராதானையொன்றின் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

நாடு தற்போது பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதற்கான காரணம் சுயநலமான, பேராசையுடைய கலாசாரமாகும். எமது நாட்டுத் தலைவர்களே இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர்.

முதலாவதாக இவர்கள் இனங்களுக்கிடையில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தினர். அதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை அடிப்படையாகக் கொண்டு மதப் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சித்தனர்.

அதனைத் தொடர்ந்து பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்தனர்.

எமது தலைவர்கள் கடந்த 74 ஆண்டுகளாக நிச்சயமற்ற வாழ்க்கையையே உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

இதே போன்று தொடர்ந்தும் பயணித்தால் எதிர்கால சந்ததியினருக்கு எதுவும் எஞ்சாது. சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு நாமும் தயாராக வேண்டும்.

ஆனால் தலைமைத்துவத்தை வேறு யாரிடமாவது வழங்கி விட்டு , அதன் பின்னர் எமது உரிமைகளைப் பெற்றுக் கொடுங்கள் என்று போராடுவது பொருத்தமற்றதாக இருக்காது என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 13 ¼ சூரி 6 செவ் 10 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:O/L சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13002 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 55 சூரி 5 செவ் 1 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்:முகாமையாளர் (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13001 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: சூரி 3 செவ் 6 இல்<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: இலங்கை பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13003 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 19 ½ சூரி 10 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:BA (Hons) ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13004 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 78 சூரி 1 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13006 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 22 ½ சூரி 12 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: BBA (Hons) முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/13005 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: சூரி . செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: A/L சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/13009 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 1<br>கி.பா: சூரி 2 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: NVQ தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/13007 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




07.10.2022 அன்று இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான **சந்திரலிங்கம் சிவகனிஸ்டன்** அவர்கள் சிறப்புக் கலைமாணி பட்டதாரியாகவும் **செல்வநாயகம் சசிராஜ்** அவர்கள் பொதுக்கலைமாணிப் பட்டதாரியாகவும் மகுடம் சூடி எமக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம். (இ)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்த தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொள்ளட்டும். – கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை ஏழ்மையான நாடா? இன அழிப்புச் செய்யும் நாடா?

இராம – இராவண யுத்தம் நடக்கிறது. வானர சேனைகள் கண்டபாட்டில் தாக்குதல் நடத்துகின்றன.

அழகிய இலங்காபுரியை அனுமன் எரியூட்டுகின்றான்.

அந்தோ! கற்புடைத்தேவி சீதையைக் கவர்ந்து வந்ததால் தர்மம் அழிந்து அதர்மம் தலைவிரித்தாடியபோது இலங்கை அழிவுற்றது.

அனுமனால் எரியூட்டப்பட்ட இலங்கையை இராணவனனின் மாமனான மயன் மீளவும் அழகிய தேசமாகக் கட்டியெழுப்பினான் என இதிகாசம் கூறுகிறது.

ஆக, இலங்கை வேந்தன் இராவணன் நீதி வழுவியதால் இந்த நாடு ஒரு தடவை எரிந்து தனது செல்வங்களையெல்லாம் இழந்தது.

இப்போதும் இலங்கை செல்வங்களையெல்லாம் இழந்துள்ளது. தென்பகுதி எரிந்தது. வறுமை வாட்டுகிறது.

உலக நாடுகளிடம் கையேந்திப் பிச்சை எடுக்கின்ற அளவுக்கு நிலைமை வந்தது.

இதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்ற கொடுமை. அப்பாவி இளைஞர்களைக் கடத்தி அவர்களைக் காணாமல் ஆக்கியமை.

இதற்கும் மேலாக, தமிழ் அரசியல் கைதிகளை விளக்கம் விசாரணை இன்றி சிறைகளில் அடைத்து வைத்திருத்தல் ஆகிய பாவச் செயல்கள் காரணமாக இலங்கை தன்னிடமுள்ள எல்லாச் செல்வங்களையும் இழந்து போயிற்று.

ஆம், தமிழ்த் தாய்மார் அல்லலப்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் பெரும்படையாக நின்று இந்த நாட்டின் செல்வத்தைத் தேய்த்தது.

உண்மை. தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமையும் அந்த மக்களைச் சித்திரவதைப்படுத்துகின்ற பாவ வினையும் சேர்ந்து இந்த நாட்டை அழித்தது.

இதுவே நிஜமாக இருக்கையில், இலங்கை ஏழை நாடு என்று பிரகடனப்படுத்துகின்ற கேவல நிலைக்கு இந்த நாட்டின் ஆட்சித் தரப்பு வந்துவிட்டது.

இலங்கை ஏழை நாடு என்று பிரகடனப்படுத்துவதன் மூலம் பிச்சாடன பாத்திரம் ஏந்தி உலக நாடுகளிடம் பிச்சை எடுக்க முடியும் என்பதைவிட, ஏழை நாடு என்ற பிரகடனப்படுத்தலால் வேறேதேனும் கௌரவத்தனங்கள் உண்டா என்ன?

எதுஎவ்வாறாயினும் இலங்கை ஏழை நாடு அல்ல. மாறாக இலங்கை தமிழின அழிப்புச் செய்த ஆட்சியாளர்களின் ஆக்கிர மிப்புக்குள் அகப்பட்டுள்ள நாடு.

எனவே இலங்கை இன அழிப்புச் செய்கின்ற நாடு என்று பிரகடனப்படுத்துவதே சாலப் பொருத்துடையது.

## காலிமுகத்திடல் பதற்றம்; விசாரிக்க தீர்மானம்

(கொழும்பு)

காலி முகத்திடலில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

காலிமுகத்திடலில் அமைதிவழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு ஆறு மாதங்கள் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் தங்களது உயிரை பணயம் வைத்த போராட்டக்காரர்களையும் நினைவு கூரும் வகையில் நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதனை சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆர்ப்பாட்டம் மேற்கொள்வதற்கு முன்னர் அவர்களை அங்கிருந்து கலைப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என கேள்வி எழுப்பியுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஐவர் கைது செய்யப்பட்டதோடு, 16 வயதுடைய சிறுவன் விடுதலை செய்யப்பட்டார்.

ஏனைய நால்வரும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தினை எந்த அடிப்படையில் கலைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதற்கான காரணத்தை 24 மணித்தியாலத்திற்குள் அறிவிக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (4-7)

## தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் சூழ்ச்சி

### கிரியெல்ல சாடல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தேர்தல் நடந்தால் அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உத்தரவாதம் இருக்காது என்பதனால் பல்வேறு சூழ்ச்சிகளை அவர்கள் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நடத்தப்பட வேண்டும் என்ற சூழலில் தேர்தல் முறை சரியில்லை எனக் கூறி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றனர்.

தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் நீதிமன்றத்தின் மூலம் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** செம்பியன்பற்று, குடாரப்பு, மாமுனை, நாகர் கோவில், நெல்லியான் இராணுவம் முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்மைக்குளம், மற்க்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கடற்படை முகாம்-ஓலைத்தொடுவாய், புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு களஞ்சியம்), கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடி சந்தி, ஓலைத்தொடுவாய், சணி கிராமம், தாழ்வுபாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 4 மாதங்களின் பின்னர் ரஷ்யா- இலங்கை இடையிலான விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

நான்கு மாதங்களின் பின்னர் ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான விமான சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

வாரத்திற்கு 2 நாட்கள் இந்த விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய, ரஷ்யாவின் நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்றை இலங்கை அதிகாரிகள் தடுத்து வைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த ஜூன் மாதம் முதல் இலங்கைக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான விமான சேவை இடைநிறுத்தப்பட்டது.

அயர்லாந்திலுள்ள செலஸ்டியல் ஏவியேஷன் ட்ரேடிங் லிமிட்டட் என்ற நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்ததன் பின்னர் குறித்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

விமானம் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில், ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவரை அழைத்து ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தமது அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தேர்தலை ஒத்திவைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### முன்னாள் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபையினால் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபத்திற்காக மாத்திரமே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவரும் அறிவார்கள்.

அரசாங்கத்தின் இந்த தீர்மானங்களுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து வலுவான நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## நாமலுக்கு அமைச்சு பதவி வழங்க பின்னடிக்கும் ரணில்

(கொழும்பு)

10 அமைச்சுப் பதவிகளே வெற்றிடமாக உள்ள நிலையில் 14 பேருக்குப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதனாலேயே அமைச்சரவை நியமனம் தாமதமாகி வருகின்றது என்று அரச தரப்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிடமாகவுள்ள 10 அமைச்சுப் பதவிகளுக்குப் பெரும்பான்மையை கொண்டுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதில் இருவரை அமைச்சர்களாக நியமிக்க ஜனாதிபதி இணங்கவில்லை என்று அறிய வருகின்றது.

இதேசமயம், அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளைச் சேர்ந்த துமிந்த திஸநாயக்க, வஜிர அபேவர்த்தன, ஏ.எல்.எம். அதாவுல்லா, ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

10 அமைச்சுப் பதவிகளே வெற்றிடமாக இருக்கும் நிலையில் 14 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையால் நியமனங்கள் தொடர்ந்து தாமதமாகி வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, ஜனாதிபதி அமைச்சராக நியமிக்க இணக்கம் காட்டாத இருவரின் பெயர்ப் பட்டியலில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நாமல் ராஜபக்ஷவின் பெயரும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான மீன்பிடி முறை நிறுத்தப்படாவிட்டால்

# வடக்கை முடக்கி போராட்டம் முன்னெடுக்கப்படும்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கில் சட்டவிரோத மீன்பிடி முறைகள் நிறுத்தப்படாவிட்டால் வட மாகாணத்தை முடக்கி மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம் பெற்ற மீனவர்களின் போரா ட்டத்திற்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் குறித்த போராட்டம் தொடர்பாக ஆராய் வதற்காக கொழும்பிலிருந்து வந்த குழு ஒன்று அவர்களது கோரிக்கை தொடர்பில் ஆரா ய்ந்து அமைச்சு மட்டத்தில் நாளை தீர்வு வழங்கும் என ஏற்கனவே அறிவித்திருந்தார் கள் அவ்வாறு மீனவர்களுக்கு சார்பாக தீர்வு வராவிட்டால் வடக்கு மாகாணத்தை முடக்கி போராட்டத்தில் ஈடுபடுவதற்கு நாங்க தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார். (நி-6-33)

# யாழ்.மாவட்டத்தில் தொடர் மழை

## நெடுந்தீவில் கூடியளவு மழைவீழ்ச்சி பதிவு

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமையும் நேற்றுத் திங்கட்கிழமையும் தொடர் மழை பெய்துள்ளது.

நேற்று முன்தினம் அதி காலை 3.30 மணி முதல் முற்பகல் 11 மணி வரையும், நேற்று அதிகாலை முதல் காலை 9.30 மணி வரையும் மழைவீழ்ச்சி பதிவாகி உள் ளது.

கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று முன்தினம் ஞாயிற்று க்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத் தில் யாழ்.நெடுந்தீவில் கூடிய ளவு மழைவீழ்ச்சியாக 63.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளதாகத் திரு நெல்வேலி வானிலை அவ தான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப்பகுதி யில் அச்சுவேலியில் 43.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 30.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகி உள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6-18)



"அனைவரினதும் உளநல மற்றும் நல்வாழ்வை உலக ளாவிய முன்னுரிமையாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்ட உளநல பிரிவின் ஏற்பாட்டில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரனையில் உலக உளநல தினம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் - 10 மணியளவில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்: ஜோசப்நயன்)



தெல்லிப்பழை கூட்டுறவு மரு த்துவமனையின் சமூகச் செயற் பாட்டின் மற்றோர் அங்கமாக உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்ய ப்பட்ட 30 வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு தலா நான்காயிரம் ரூபாய் பெறும தியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் அண்மை யில் கையளிக்கப்பட்டன. (படம்: ரவிசாந்)

# NVQ தரத்திலான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுவரும் NVQ தர த்திலான தாதி உதவியாளர் NVQ மட்டம் III மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் NVQ மட்டம் IV ஆகிய கற் கைநெறி எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பிக்க உள்ளமை யால் இக்கற்கை நெறியினை கற்க ஆர்வமுள்ளவர்கள் கல்வி சான்றிதழ்களின் மூலப்பிரதி, நிழல் பிரதி, தேசிய அடையாள அட்டையின் மூலப்பிரதி, நிழல் பிரதி மற்றும் பிறப்புச் சான்றித ழின் மூலப்பிரதி, நிழல் பிரதி ஆகிய ஆவணங்களுடன் நாளை மறுதினம் மற்றும் 14 ஆம் திகதி ஆகிய திகதிகளில் A9 வீதி, ஆனந்தபுரம் கிளி நொச்சியில் அமைந்துள்ள NAITA மாவட்ட காரியாலய த்திற்கு காலை 9 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகம ளிக்குமாறு தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் தெரிவித்து ள்ளார்.

மேலதிக விபரங்களி ற்கு 021 228 5615, 071 455 3775 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும். (6)

## 'மக்களின் சுதந்திர உரிமைகள் மீது கை வைக்காதே'

# காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

"மக்களின் சுதந்திர உரி மைகள் மீது கை வைக் காதே" என்ற தொனிப் பொருளில் கொழும்பு காலி முகத்திடலில் நேற்று ஆர்ப் பாட்டமொன்று முன்னெ டுக்கப்பட்டுள்ளது. இந்த எதி ர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சட்ட த்தரணிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு காலி முகத்திட லில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைதி ஆர் ப்பாட்டத்தின் போது பொலி ஸார் மிகவும் மூர்க்கத் தனமாக நடந்து கொண்ட தைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்க ப்படுகின்றது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 300 |
| தக்காளி | 260 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 240 |
| கோவா | 380 | 400 | 450 |
| கரட் | 250 | 400 | 450 |
| பூசணி | 220 | 160 | 240 |
| புடோல் | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 200 | 160 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 220 |
| பாகற்காய் | 800 | 750 | 800 |
| வெண்டிக்காய் | 180 | 230 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 320 |
| லீக்ஸ் | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 350 | 350 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 900 | 800 |
| போஞ்சி | 600 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 500 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 400 |
| முள்ளங்கி | 120 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒன்றரை கிராம் ஹெரோயின், 10 ஊசி சிரிஞ், தேசிக்காய், லைட்டர், தீப் பெட்டி உள்ளிட்ட போதை ஏற்ற பயன் படுத்தப்படும் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,33,104)

## மகிந்தவை...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

கடந்த சில நாட்களாக போராட்டத்தின் பின்னர் எமது கட்சியையும் எதிர்க்கட்சித் தலைமையையும் கடுமையாக விமர்சித்தார்கள்.

சிலர் சில வியாக்கியானங்களை முன்வைத்தனர். ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன இப்போது துண்டு துண்டாக உடைந்து பத்துப் பேருடன் ஒன்றிணைக்க முடியாத் நிலையை நாம் கண்டோம்.

மகிந்த ராஜபக்ஷ என்ற அந்த ஆதரவற்ற தலைவரையும் எமது கட்சியின் இலட்சிய தலைவரையும் இந்நாட்டு மக்கள் இன்றும் நேசிக்கின்றார்கள் என்ற செய்தியை களுத்துறையில் இருந்து ஒன்றுபட்டு எழுவோம் என்ற தொனிப்பொருளில் நிரூபித்தோம் எனத் தெரிவித்தார். (4-7)



















## அடக்குமுறை...

முன்தினம் இடம்பெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் மிகவும் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தையடுத்து கொழும்பு காலிமுகத்திடல் வீதி முற்றாக மூடப்பட்டது.

காலிமுகத்திடலில் போராட்டக்களத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வில் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவரான 16 வயது மாணவன் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்கள் 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது. (4-7)

## வவுனியாவில்...

இடியுடன் கூடிய கன மழை பெய்திருந்தது.

இதனால் தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதுடன், சில வீதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

இதேவேளை வவுனியாவில் ஒரு சில நாட்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7,299)

## அந்நிய செலா...

தொற்று நீக்கி, திரவ மருந்து உற்பத்தி தொழிற்சாலையை நேற்று கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

நமக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி நமது தேவைக்கே போதுமானதாக இல்லை. அதனால் ஒவ்வொரு வருடமும் கடன் வாங்க வேண்டியுள்ளது. இப்போது கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளோம்.

நமது பொருளாதாரம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். நமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை நாம் ஈட்ட வேண்டும். அந்நிய செலாவணி பற்றாக்குறையுடனோ வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையுடனோ இருக்க முடியாது.

வரவுசெலவுத் திட்டத்தில் மேலதிக நிதியை வைத்திருப்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

அவ்வாறாயின் நமது வெளிநாட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கு நாம் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் பொருட்கள், பயிரிடும் பயிர், வழங்கும் சேவைகளை அதிகரிக்க வேண்டும். மிகவும் போட்டித் தன்மை கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் ஒன்றே நமக்குத் தேவை" எனக் குறிப்பிட்டார். (4-7)

## முதல் பெண்...

வத்துடனான மோதலில் அவர் வீரச்சாவடைந்தார்.

அவர் வீரச்சாவடைந்த இடத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வேலன் சுவாமிகளால் மலர் தூவி விளக்கேற்றி அஞ்சலி செய்யப்பட்டது. (4-7,33,60)

## வடக்கை முன்...

சாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் கல்வி கற்று உயர் பட்டப்படிப்புகளை முடித்தவர்கள் கட்டாயமாக நீங்கள் வடக்கு மாகாணத்திலே கடமையாற்ற வேண்டும். உங்களுடைய மாகாணத்தை முன்னேற்றுவதற்கு உங்களால் ஆன பங்களிப்பினை செய்ய வேண்டும்

குறிப்பாக நான் இன்று வடக்கு மாகாண பிரதம செயலாளராக கடமை ஆற்றுகின்றேன் நான் ஏன் தென் பகுதியில் இருந்து இங்கு வரவேண்டும். இங்கே அந்தப் பதவிக்கு உங்களது மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படலாம்தானே எனவே நீங்கள் உங்கள் சொந்த மாகாணத்திற்கு உங்களால் ஆன பங்களிப்பினைச் செய்ய வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு நீங்கள் கட்டாயமாக உங்களாலான பங்களிப்பினை வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-7)

## முல்...

மீட்கப்பட்டுள்ளன.

பிரதேசவாசிகள் காணியினை துப்புரவு செய்த பொழுது குறித்த மனித எச்சங்கள் தென்பட்டு உள்ளன.

இது தொடர்பில் பிரதேசத்திற்குரிய பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம்தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு மண்டையோடு மற்றும் இரண்டு கால் எலும்புகள் என்பன இதன்போது மீட்கப்பட்டுள்ளன. இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் மனித எச்சங்களின் ஒரு பகுதி என இது சந்தேகிக்கப்படுகிறது. (4-7)

## ஜனா...

பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-7)

## தவ...

21 வயதான மஅஜந்தன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (4-7,6)

## சாவகச்சேரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்தியசாலையின் அத்தியட்சகர், வைத்திய கலாநிதி சி.குமாரவேல் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

120 மில்லியன் ரூபாய் செலவிலான மூன்று மாடி கட்டடத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 23 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார சுதேச மருத்துவ சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-7,30)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13060)

**076 825 7716** (ஆகாஸ்)

# 7 கடல் மைல் நீந்தி தமிழகம் சென்ற இலங்கையர்

இலங்கைத் தமிழர் ஒருவர் பாக்கு நீரிணையில் ஏழு கடல் மைல் தொலைவை நீந்தி தனுஷ்கோடியை அடைந்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனுஷ்கோடியை அடைந்ததாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஹசன்கான் எனும் அஜய் என்பவரே தமிழக கரைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மையும்ஜந்து பேர் கொண்ட குடும்பத்தையும் சட்டவிரோதமாக தமிழகத்திற்கு ஏற்றிச் சென்ற படகு மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியபோது தாம் கடலில் குதித்ததாக அவர் தமிழக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (4-7)

**தமிழ்/ ஆங்கில மொழி மூலம்**

**A/L இரசாயனம்**
**O/L கணிதம்**

யாழ். நகரப் பகுதிகளில் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.
தொடர்பு (13021)

**071 257 9018**

**டிப்பர் வாகனம் உடன் தேவை**

06 சில்லு, 10 சில்லு டிப்பர் வாகனம் உடன் தேவை

தொடர்புகளுக்கு (C-5062)

**077 071 6329**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- தரகர் தேவையில்லை.
- A9 வீதி முகப்புடன் காணி உள்ளது.

**077 874 8135,**
**077 408 2649**
(13072)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :-
  காலை 6.00 - மாலை 6.00

(13072)

**077 911 6983, 076 755 8606**

**காணி விற்பனைக்கு**

யாழ். மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையிலுள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.



(13066)

தொடர்புகளுக்கு

Viber & Whatsapp

**00447479682212**

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Visa Extension வெளிநாட்டு Passport
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**



**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

**55'000 விசா**

உடனே பதியுங்கள்

ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

V2 Travels and Tours Facebook (C-4921)

**V2 Travels 0768226240 0768226244**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 27 – 11 – 1932 |  | 10 – 10 – 2022 |

## யோகநாதன் யோகம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் இல. 134, புங்கன்குளம் சந்தி கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் யோகம்மா அவர்கள் நேற்று (10.10.2022) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் சிவயோகம், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பரமேஸ்வரி மற்றும் செல்வரட்ணம், இராசம்மா, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குணராசா, சறோஜினிதேவி, ரஞ்சினிதேவி, மாலினிதேவி, தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன், தவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஈஸ்வரி, சோமசுந்தரம், மகேந்திரம், சின்னத்தம்பி, மகாலிங்கம், மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தேவராசா, பகீரதன், பிரதீபன், பாமினி, கமலரூபன், தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் லதுர்சிகா, சங்கீத், ஆரபி, அஸ்னாகிறஸ், சர்மி, சங்கவி, சாம்ஜக்சன், தரங்கினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2022) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (13068)

இல. 134, புங்கன்குளம் சந்தி,
அரியாலை.
077 553 2876

தகவல் :-
குடும்பத்தினர்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13070)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org